மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நிர்வாகத்தைப் பொறுத்தமட்டிலேதான் சில கோவில்களிலே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்றார்கள். பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்ற கோவில்களிலே திருப்பணிக் குழுவிற்கு வேறு யாரையும் நியமிக்கக் கூடாது என்ற கட்டுப் பாடு இல்லை. ஆகவே அந்த பரம்பரை அறங்காவலர்களைத் தவிர்த்து அங்கே இருக்கக்கூடிய இந்தத்திருப்பணியிலேஆர்வம் காட்டக் கூடிய அனைவரையும் நாம் அங்கே திருப்பணிக் குழு விலே நியமிக்கலாம்.

பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்கள்.

*5100—திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறையினருக்குப் பாதி விலையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுவது போன்று வனக் காவலர்களுக்கும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு காவல் துறையினருக்குப் பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது போல் சிறைத் துறை அலுவலர்களுக்கும் வழங்கியுள்ளார்கள். அதைப்போன்று வனத் துறை அலுவலர்களுக்கும் பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்ற வகையில் திட்டத்தை இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இதுவரை எந்த வன அலுவலர்கள் சங்கமும் எழுப்பாத ஒரு கோரிக்கையை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஏன் எழுப்புகின்றார் என்று புரியவில்லை.

திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதி விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்பதற்குக் காரணமே பல் நெடுங் காலமாக விலைவாசி ஏறி வருவதுதான். இந்த ஏற் றத்தை கருத்திற் கொண்டு, 'ரிஸ்க் அலவன்ஸ்', வீட்டு வாடகைப் படி, அதே போன்று பயணப்படியை உயர்த்துவதற்காக வனத்

1990 மே 11]

துறை அலுவலர்கள் ஒரு வார காலமாகப் போராடுவதை நிறுத்துவதற்காக இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மூலக் கேள்வி அத்தியாவசியப் பொருள்களைப் பற்றியது. துணைக் கேள்வி வேறு எங்கோ செல்கிறது. அவர்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தபடி அந்த பாரஸ்டினுடைய உண்ணா விரதத்தை அவர்களே முடித்துக் கொள்ளவிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரயில்வே சுரங்கப் பாதைப் பணி.

*9365—திரு. சா. கணேசன் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) தியாகராய நகர் தொகுதியில் உள்ள மாம்பலம் இரயில்வே சுரங்கப் பாதைப் பணி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியை மீண்டும் தொடர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தெரியும்.

(ஆ) அப்பணியை மீண்டும் தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராயர் நகரையும் மேற்கு மாம் பலத்தையும் இணைக்கின்ற வகையில் மேட்லி தெரு, ஈஸ்வரன் கோவில்தெரு இடையில் இணைக்கும் இரயில்வே சுரங்கப் பாதை அமைப்பது மூலமாக போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வாய்ப் பாக இருப்பதால் விரைவாகப் பணியினை மேற்கொள்ள அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி ஆரம்பக் காலத்தில்துவங்குவதற்கு, நிலம் கையகப்படுத்துவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம்